C M Y K



# அமெரிக்காவில் ஏலம் விடப்பட்டது

## காந்தியடிகளின் பொருட்களையா? அல்லது அவரது கொள்கைகளையா?

**காந்தி அடிகளின் வாரிசு என்பதை மட்டுமே சொல்லிக் கொண்டு, கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சி அதிகாரத்தை, கரும்பை முழுமையாக சுவைத்துவிட்டு சக்கையாக்கியதைப் போல, காங்கிரஸ் கட்சியும் நாட்டை முழுமையான சக்கையாக்கிவிட்டது. காந்தியடிகளின் பெயரை ஒருபுறம் கூறிக் கொண்டே, மறுபுறம்இந்த நாட்டின் விலைமதிப்பற்ற இயற்கை வளங்களையும் மனித உழைப்பையும் உலகப் பெருமுதலாளிகளும் இந்திய பெருமுதலாளிகளும் சுரண்டி எடுத்து செல்வதற்கு உரிமத்தை வழங்கிவிட்டு, தனக்கான தரகுப் பணத்தையும் இது பெற்றுக் கொண்டுவிட்டது. ஆனாலும் காந்தியின் பெயரில் தான் ஆட்சி நடக்கிறது என்ற கபட நாடகத்தை மட்டும் இது கைவிடவில்லை. காங்கிரஸ் கட்சியின் இந்த கபட நாடகம் தான் இப்பொழுது அம்பலமாகி நிற்கிறது.**





சி.மகேந்திரன்



...காந்தி அடிகள் பயன்படுத்திய ஐந்து பொருட்கள் அமெரிக்காவில் ஏலம்விடப்பட்டு விட்டதாக செய்திகள் வந்துள்ளன. இவருடைய கருணையையும், அறிவுக்கூர்மையை சுமந்த அவரது கண்களோடு இடையறாது வாழ்ந்து வந்த உலோக வளையங்களில் பொருத்தப்பட்ட அந்த மூக்கு கண்ணாடி, உயிர் வாழ்வதற்கு மட்டும் உணவு தேவை என்று கொள்கையை உலகுக்கு அறிவித்து, அவருக்குப் பயன்பட்ட அவருடைய கோப்பையோடு கூடிய தட்டு, இடையறாது இவரது கால்களுடனேயே இணைந்து அலுப்பற்று நடந்து சென்ற ஒரு ஜோடி செருப்பு, காந்தியடிகளின் அடையாளமாக எப்பொழுதும் அவரது இடுப்பில் சொருக்கி வைக்கப்பட்டிருக்கும் ஜெனித் சில்வர் கடிகாரம் ஆகிவை தான் ஏலம் விடபட்ட காந்தியடிகளின் பொருட்கள்.

ஏலம் அமெரிக்காவின் வாஷிங்டனில் நடைபெற்றது. உலகம் முழுவதிலும் இருந்து சட்டப்படியும், சட்டத்திற்குப் புறம்பாகவும் தொன்மையானப் பொருட்களை எல்லாம் சேகரித்து விற்பனை செய்யும் மான்காட்டன் ஏலக்கடையால் இது நடைபெற்றது. காந்தியடிகள் பயன்படுத்திய இந்தப் பொருட்கள் பத்திரிக்கையாளரும் வழக்கறிஞருமான ஜேம்ஸ் ஒடீஸ் என்பவரிடமிருந்து ஏலக் கம்பெனிக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

ஏலநாளில் அதாவது, மார்ச்சு 5 ஆம் தேதி வழக்கத்திற்கு மாறாக கூட்டம் இங்கு நிரம்பி நின்றதாக ஊடகங்கள் தெரிவித்துள்ளன. காந்தியடிகளின் இந்த ஏலத்தில் தகவல் பரிமாற்றம் செய்து கொள்வதற்கு மட்டும் தொலைபேசிகள் காத்திருந்தன. ஆஸ்திரேலியா, ஜெர்மன், ஆஸ்டிரியா, இந்தியா, கனடா, அமெரிக்கா என்று உலகின் தொல்பொருள் சேகரிப்பதில் ஆர்வம் கொண்ட பலரும் அங்கு பறந்து வந்திருந்தார்கள். இதைத் தவிர, இணையத் தளங்களின் மூலம் ஏலம் கேட்பதற்கு உரிய சிறப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. இதற்கு முன்னர், புகழ் மிக்க மனிதர்களின் பொருட்கள் பல இந்த ஏலக் கம்பெனியின் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. விஞ்ஞானி ஆல்பாட் எடிசன் கடிகாரம் ஒன்று மிக அண்மையில் 6 லட்சம் டாலருக்கு இந்த கம்பெனியின் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் ஏலக் கம்பெனிகள் தந்திரங்களின் மூலம் கொள்ளை லாபம் ஈட்டுவதில் மிகுந்த முன் அனுபவத்தைப் பெற்றவை. மான்காட்டன் கம்பெனி ஏலம் விடுப்பதற்கு முன்னரே காந்தியடிகளின் பொருட்களுக்கு மிகவும் கூடுதல் விளம்பரத்தை இது தேடிக் கொண்டு விட்டது. இதற்கு காந்தியடிகள் பயன்படுத்தியப் பொருட்கள் என்பது மட்டும் காரணம் அல்ல. டெல்லி நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கும் ஒன்றும் காரணமாக அமைந்துவிட்டது. காந்தியடிகளின் பொருட்களை ஏலம் கம்பெனி விற்பனை செய்யக் கூடாது என்று தடை ஆணை ஒன்றை டெல்லியின் உயர்நீதிமன்றம் ஏலக் கம்பெனிக்குப் பிறப்பித்திருந்தது. இந்த ஏலம் நடைபெறுவதை தடுக்கமுடியவில்லை என்றாலும் பெரும் பரபரப்பை உருவாக்கி ஏலத் தொகை உச்சத்தை எட்டுவதற்கு இது காரணமாக அமைந்துவிட்டது.

ஏலம் விடுவதைப் பார்ப்பதற்கு வந்தவர்களில் சிலர் மிகவும் உணர்ச்சி வயப்பட்டிருந்தார்கள் என்பதை ஊடகங்கள் பதிவு செய்துள்ளன. ஹிமாட்ரி ராய், அமெரிக்காவில் பல ஆண்டுகளுக்கு முன்னரே குடியேறி, தனியாக தொழில் நடத்தி வரும் பொறியாளர். இவருக்கு இப்பொழுது வயது 72. கண்ணீர் மல்க காந்தியடிகள் பயன்படுத்திப் பொருட்கள் ஏலம் போவதை இவர் பார்த்துக் கொண்டிருப்பதாக குறிப்பிடுகிறார்கள். ஊடகங்களுக்கு கொடுத்தப் பேட்டி ஒன்றில் தனது 10 வயதில் இதே கண்ணாடியோடு காந்தியடிகளை அருகில் இருந்து பார்த்தாக உணர்ச்சி கொப்பளிக்கக் குறிப்பிட்டுள்ளார். இந்த உணர்வு ஏலத்தில் நேரில் பார்த்த ஹிமட்ரி ராய் என்பவரின் உணர்வு மட்டுமல்ல. இது தான் இந்தியர் ஒவ்வொருவரின் உணர்வாக இருக்க முடியும். காந்தியடிகளின் பொருள்கள் இவ்வாறு ஏலம் போவதை யாரால் தான் சகித்துக் கொள்ள முடியும்?

ஏலக் கம்பெனியாளர்கள் விற்பனைத் தொகையை உயர்த்த நடத்திய நாடக காட்சிகள் ஒவ்வொன்றாக நிறைவு பெற, இறுதியாக இந்தியாவின் கர்நாடகாவை சார்ந்த விஜய மல்லையா ஒரு பெரும் தொகைக்கு இதனை ஏலம் எடுத்துள்ளார். இதன் மூலம் காந்தியடிகளின் பொருட்கள் இந்தியாவிற்கு வந்து சேர்ந்தன என்பதில் ஒருவிதமான மகிழ்ச்சி இருந்த போதிலும், இந்திய அரசாங்கத்தின் கடந்த காலத்தைப் பற்றிய பல்வேறு கேள்விகளை இந்த நிகழ்ச்சி எழுப்பியுள்ளது. இந்தியாவின் தந்தை காந்தி என்று நமது ஆட்சியாளர் சொல்வது உண்மை என்றால், இவரது மதிப்பு மிக்கப் பொருட்கள் இந்தியாவை விட்டு வெளியேறுவதற்கு கடந்த காலத்தில் எப்படி அனுமதி அளிக்கப்பட்டது. இதன் பிறகு பல ஆண்டுகளாய் இந்த பொருள்களை இந்தியாவிற்கு கொண்டு வர வேண்டும் என்ற முயற்சியற்று அரசாங்கம் இருந்ததிற்கு காரணம் என்ன?

இந்தியா இன்றைய உலக வல்லரசுகளின் முதன்மை பட்டியலில் இருப்பதாக பெருமைபட்டுக் கொள்கிறது. முப்படைகளின் வலிமைக் கொண்ட இந்த வல்லரசு என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனால் காந்தியடிகளின் மிகவும் எளிமையானப் பொருட்களைக் கூட எவ்வாறு இந்த வல்லரசால் பாதுகாத்து வைத்து முடியாமல் போனது? நாடாளுமன்ற தேர்தலில் சட்டத்திற்கு புறம்பான பெரும் பணத்தோடு வெற்றி கனவுகளில் மிதந்து கொண்டிருக்கும் காங்கிரஸ் கட்சிக்கு இது குறித்து எந்தவிதமான அவமானமும் கட்டாயம் இருக்கப் போவதில்லை என்பது நாம் அறிந்த ஒன்றுதான்.

தனது எளிய வாழ்க்கையை முன்னிறுத்தி, உலகின் அசைக்க முடியாத மாபெரும் சக்தியாக திகழ்ந்த பிரிட்டிஷ் அரசாங்கத்தை காந்தியடிகள் எதிர்த்த போது உலகம் இவரைப் பாலத்து ஒருகணம் அதிர்ந்து போய் நின்றது. பூமி பரப்பெங்கும் கேட்குமாறு இவர் உரக்க சப்தமிட்டு சொன்னார். இந்த பரந்த நிலப் பரப்பில் என்னுடைய காலடியை எடுத்து வைப்பதற்கு கொஞ்சம் வெளிச்சமும் ஒரு அடி நிலமும் இருந்தால் போதும் இந்தியாவின் விடுதலையை நான் பெற்றுவிடுவேன் என்று புதிய நம்பிக்கையை வழங்கினார். இந்த மாமனிதனின் லட்சிய வாழ்க்கையின் அடையாளமாக அவரது இறுதி மூச்சு வரை அவருடன் வாழ்ந்த அந்த லட்சியப் பொருட்களின் மீது எவ்வாறு இந்திய மக்கள் அக்கறையற்று இருக்க முடியும்?

பொறுப்பற்ற இந்திய அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து, இப்பொழுதாவது யோசித்துப் பார்ப்பது மிகவும் அவசியமானதாகும். பொருட்களை ஏலமிடப் போகிறார்கள் என்பதை அறிந்து காந்தியடிகளின் குடும்பத்தை சார்ந்தவர்கள் அரசாங்கத்திற்கு வேண்டுகோளை தொடர்ந்து வெளியிட்டு வந்தார்கள். கல்வியாளர்கள், காந்தியடிகளின் அபிமான தொண்டர்கள் என்று பலரும் காந்தியடிகளின் பொருட்களை எப்படியும் மீட்க வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்து வந்தனர். இதனைப் பற்றி அரசாங்கம் எந்த கவலையையும் கொண்டதாக தெரியவில்லை. காந்தியடிகள் பயன்படுத்திய பொருட்களின் முழுவிலையையும் இந்திய அரசு செலுத்தி, அதனை மீட்க வாய்ப்பிருந்தும் அதனை ஏன் செய்யவில்லை என்ற கேள்வி இப்பொழுதும் எழுந்து கொண்டு தான் இருக்கிறது.

விஜயமல்லையா, கடந்த சில ஆண்டுகளில் இந்தியாவின் முன்னணி தொழிற் அதிபர்களில் ஒருவராக அறியப்பட்டவர். இவர் விமான போக்குவரத்தை இயக்குவது முதல் பல்வேறு தொழில்களுக்கு உரிமையாளராக இருந்தாலும், இவரது தொழிற்வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்து வித்திட்டது சாராயவியபாரம் தான். ஆனால் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து குடி பழக்கத்திருந்து மக்களை மீட்டெடுக்க, போதைக்கு எதிராகப் பிரச்சாரம் செய்து வந்த காந்தியடிகளின் பெருமைக்குரிய பொருட்கள், விஜய மல்லையாவின் சாராயம் விற்ற காசிலிருந்து தான் மீட்கபட்டுள்ளது என்பது எத்தகைய வேதனைக்குரியது.

இன்று தமிழ் மக்கள் பெரும் எண்ணிக்கையில் கொல்லப்பட்டு வருகிறார்கள். ஆனால் ஈழப் பகுதியில் போடப்படும் குண்டுகள், குண்டுகளை வீசும் விமானங்கள் ஆகியவை இந்திய அரசால் வழங்கப்பட்டவை. இதைத் தவிர மத்திய அரசு பொருளாதார உதவி என்ற பெயரில் பல்லாயிரம் கோடியை இலங்கை அரசுக்கு கொடுத்துள்ளது. இவை அனைத்தும் தமிழ் மக்களுக்கு எதிரானப் போருக்கு தான் பயன்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை யாராலும் மறுக்க முடியாது. காந்தியடிகளின் பொருட்களை மீட்க விஜயமல்லையா செலுத்தியது 9 கோடியே 20 லட்சம்.

தமிழ் மக்களின் கொலைக்காக பல கோடி ரூபாய்களை தானமாக வழங்கும் இந்திய அரசு, இதில் ஒரு சிறுப்பகுதியை காந்தியடிகளின் ஏலம் போகும் பொருட்களுக்கு கொடுத்து மீட்டெடுத்திருக்கலாம் அல்லவா?

இது தான் காங்கிரஸ் கட்சியின் இந்திய அரசு என்பதை இப்போதைக்காவது புரிந்து கொள்வது அவசியமாகிவிட்டது.



# அகிலத்தை அறிவோம்...




## ஈக்வடார்

| | |
|---|---|
| தலைநகர் | க்விட்டோ |
| பரப்பளவு | 256370ச.கி.மீ. |
| நாணயம் | அமெரிக்க டாலர் |
| மக்கள் தொகை | 13922000 |
| மொழி | ஸ்பானிஷ் |
| மதம் | கிறிஸ்தவம் |
| கொடி | சின்னம் |





### அதிபர் : ரஃபேல் கொர்ரியா



தென்அமெரிக்காவின் வட மேற்கில் அமைந்துள்ள நாடு. வடக்கில் கொலம்பியாவும், கிழக்கிலும் தெற்கிலும் பெருவும், மேற்கில் பசிபிக் மாக்கடலும் அமைந்துள்ளன. 965கிமீ தூரத்தில் பசிபிக்கடலில் அமைந்துள்ள கலபாகோஸ் தீவும் ஈக்வடாருடன் சேர்ந்ததே.

**வரலாறு:** கி.மு.3500களிலேயே இங்கு மக்கள் வாழ்ந்திருந்ததற்கு ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன. 1463ல் இந்தப் பகுதி இன்கா பேரரசினுள் இணைந்தது.

1561ல் ஃபிரான்ஸிஸ்கோ பிஸோரோ தலைமையில் ஈக்வடாரில் நுழைந்த ஸ்பானியர்கள், சிறிது சிறிதாக நாடு முழுவதையும் கைப்பற்றி காலனியாக்கிக் கொண்டனர். ஏறத்தாழ 300 ஆண்டு காலனியாதிக்கத்திற்குப் பிறகு 1809 ஆகஸ்ட் 10 அன்று அந்நாட்டுக் குடிமக்கள் சுதந்திர முழக்கம் எழுப்பிப் போராடினர். அது தோல்வியில் முடிந்தது.

ராணுவத் தளபதி ஆண்டோனியோ ஜோஸ் சுக்ரி தலை மையில் ஸ்பானியர்களுடன் கடும் போர் நடத்தி 1822 மே 24 அன்று சுதந்திரம் பெற்றனர். 19ம் நூற்றாண்டில் நிலையில்லாமல் பல அரசுகள் அடிக்கடி மாறிக் கொண்டே இருந்தன. காப்ரியல் கார்சியா மொரினோ என்னும் பழமைவாதி 1860ல் சிதறிக் கிடந்த நாட்டை ஒன்றிணைத்தார்.

எலாய் அல்ஃபாரோ தலைமையில் 1895ல் நடைபெற்ற முற்போக்காளர் புரட்சியின் விளைவாய், மதகுருமார் மற்றும் நிலச்சுவான்தார்களின் ஆதிக்கம் குறைந்தது. இந்த முற்போக்காளர் ஆட்சி 1925வரை நீடித்தது. 1930,1940களில் ஆட்சியில் நிலையற்ற தன்மை நிலவியது.

அமேசான் பள்ளத்தாக்குப் பகுதியில், ஈக்வடாருக்கும் பெருவுக்கும் நீண்டநாள் எல்லைத் தகராறு நீடித்தது. அதன் விளைவாக 1941ல் பெரு, ஈக்வடார் மீது பெரிய அளவில் ஆக்கிரமிப்பு நடத்தியது. அமெரிக்கா மற்றும் பல லத்தீன் அமெரிக்க நாடுகளின் தலையீடு காரணமாக 1942 ஜனவரியில் ஒரு உடன்பாடு ஏற்பட்டது. அதன்படி தாவாவில் இருந்த எல்லைப்பகுதிகள் பெரு நாட்டுடன் சேர்க்கப்பட்டன.

தேசியவாத புரட்சிகர ராணுவப்படை 1972ல் அதிபர் வெலஸ்கோ இபர்ராவை அர்ஜென்டினாவிற்குத் துரத்திவிட்டு ஆட்சியைக் கைப்பற்றி 1976வரை ஆண்டது. நாட்டில் சமூக, பொருளாதார நிலைத்தன்மை ஏற்பட்டபின் 1979ல் ஜனநாயக முறையில் தேர்தலை நடத்தியது. சோசியல் கிறிஸ்டியன் கட்சியைச் சேர்ந்த அகுய்லேரா, மிக அதிக வாக்குகள் பெற்று அதிபரானார்.

1988ல் நடைபெற்ற தேர்தலில் இடதுசாரி ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ரோட்ரிகோ போஜ்ரா சிவால்லோஸ் அதிபரா னார். அவர் காலத்தில் பல்வேறு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப் பட்டன. மனித உரிமைகள் மீட்கப்பட்டன. சிறு சிறு பயங்கரவாதக் குழுக்களுடன் பேசி உடன்பாடு கண்டு, அவற்றைக் கலைக்கச் செய்தார்.

ஆயினும் பொருளாதாரப் பிரச்சனைகள் தொடர்ந்து கொண்டே இருந்தன. அது மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியதால் 1990ல் எதிர்க்கட்சிகள் மேலாதிக்கம் பெற்றன. நிலச்சீர்திருத்தம், வேலையின்மையைக் கட்டுப்படுத்துதல், சமூக நலத்திட்டங்களுக்கு முன்னுரிமை, நிலச்சுவான்தாரின் சுரண்டலை ஒழித்தல் ஆகியவற்றிற்காக மக்கள் போராடுகிறார்கள்.

2006ல் நடைபெற்ற தேர்தலில் ரஃபேல் கொர்ரியா அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

**பொருளாதாரம்:** அதிக அளவில் வாழை உற்பத்தியாகிறது. கரும்பு, ஆப்பிரிக்க பனை, கோக்கோ, அரிசி, காப்பி ஆகியவை விளைகின்றன. வெள்ளி, தங்கம், துத்தநாகம் ஆகிய கனிம வளங்கள் வெட்டி எடுக்கப்படுகின்றன. உணவு பதப்படுத்தல், மரப்பொருள், துணி நெய்தல், சர்க்கரை உற்பத்தி ஆகிய தொழில்கள் நடைபெறுகின்றன. பெட்ரோலியம் உற்பத்தி அதிகரித்து வருகிறது. புகழ்பெற்ற பனாமா தொப்பிகள் செய்யப்படுகின்றன.

**எஸ். சோமு**